# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.132/2025

**Deposition of Witness for Prosecution PW 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமுதாராணி | Husband's Name | : | செல்வநாதன் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 06th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் களப்பால் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 30.11.2025 அன்று விருப்ப ஓய்வில் பணி ஓய்வு பெற்று தற்போது தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். வலங்கைமான் காவல் நிலைய கு.எண் 306/2024 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.06.2024 அன்று அதிகாலை 1.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன், ராஜகோபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.06 14:42:15 +0530

தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.13**. பின் அதிகாலை 2.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து சா.பொ.1, சா.பொ.2 யை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.1, சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.14**. மன்னார்குடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 26.06.2024 அன்று காலை 7.30 மணி முதல் 9.30 வரை கார்த்தியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.15**. காவலர் 580 திரு அருள்தாஸிடம் பிரேதத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். 26.06.2024 அன்று பகல் 12.30 மணிக்கு நார்த்தாங்குடி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு எதிரி சீனிவாசன் என்பவரை குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் கவிபாலன், சரவணன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் என் மகன் கார்த்தியை தலையில் இரும்பு பைப்பால் அடித்து அவன் சாவதற்கு காரணமாக இருந்த இரும்பு பைப்பை மறைத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:42:21 +0530

வைத்த இடத்தை அடையாளம் காட்டுவேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.16**. அதனடிப்டையில் 14.30 மணிக்கு நீடாமங்கலம் வெண்ணாறு வடகரையில் உள்ள புதரிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த இரத்தக் கரை படிந்த சுமார் 61 செ.மீ. நீளமும் 3 செ.மீ. விட்டமும் உடைய இரும்பு பைப் ஒன்றை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.17**. மேற்படி அயிட்டம் **சா.பொ.3**. சா.பொ.3 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.18**. சா.பொ.1 முதல் சா.பொ.3 ன் புகைப்படம் **அ.சா.ஆ.19**. சா.பொ.1 முதல் சா.பொ.3 ன் 65(B) இந்திய சாட்சிய சட்ட சான்று **அ.சா.ஆ.20**. 26.06.2024 அன்று சாட்சிகள் கீதா, பிரகதீஷ்வரன், கென்னடி, மோகன், ராஜகோபால், செந்தில்வேல், வேணுகோபால்,சங்கர், அன்பழகன், கவிபாலன், சரவணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 27.06.2024 அன்று சாட்சிகள் பத்மநாதன், சாமிநாதன், நந்தினி, ஷீலாராணி, சசிகுமார், 2 ம் நிலை காவலர் ஹரிஹரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனக்கு பின்னிட்டு வந்த ஆய்வாளர் திருமதி முத்துலெட்சுமி வழக்கினை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.11.2024 அன்று 2 ம் நிலை காவலர் அருள்தாஸ்,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:42:35 +0530

டாக்டர் நிவேதா, Junior Scientific Officer செந்தில்பாபு, உதவி ஆய்வாளர் திருஞானசம்மந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். ஆய்வாளரது புலன் விசாரணை முடித்து 05.11.2024 அன்று எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 302 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆய்வாளரது விசாரணையில் சாட்சிகள் கீதா, பத்மநாபன், சாமிநாதன், பிரகதீஷ்வரன், ஷீலாராணி, சசிகுமார், கென்னடி, செந்தில்வேல், வேணுகோபால், சங்கர், அன்பழகன், சரவணன், கவிபாலன் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே வாக்குமூலங்களாக பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் விசாரணை செய்த வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் அறிக்கையில் இறந்துபோன நபரின் உடல் உள்ளுறுப்புகளான வயிறு, சிறுநீரகங்கள், கல்லீரல் ஆகியவற்றில் மது அருந்தியிருந்தற்கான அறிகுறிகள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. இறந்த நபர் மது அருந்திவிட்டு நிலை தடுமாறி கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தால் இறந்துள்ளார் என்றால் தவறு. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.06 14:42:41 +0530

என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:43:01 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.